ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/23 - 2024 මැයි මස 14 වැනි අඟහරුවාදා - 2024.05.14

*2384/23 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம்

*அதிகாரமான தலயாத்திரை கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1951 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1955 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரங்களை கையளித்தல் (பிரதேச செயலாளர்கள்) சட்டத்தின் படியும், 2011.06.10 ஆந் திகதிய 1710 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரையின் (வருடாந்த பெரஹரா உற்வசம்) தொடர்பான யாப்பின் படியும், பதுளை பிரதேச செயலாளர் துஷாரி அனுராதா நாணயக்கார ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2024 ஆம் ஆண்டு பதுளை, முதியங்கனை ரஜ மகா விகாரையின் வருடாந்த பெரஹரா உற்சவம் தொடர்பாக கீழ்வரும் ஆணைகளை பிறப்பிக்கின்றேன்.*

1. *2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி எதுல் பெரஹரா உற்சவம் ஆரம்பமாகி, 2024 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதிய ஆகிய இரு தினங்களில் பெரஹரா வீதி உலா வந்து முதியங்கனை ரஜ மகா விகாரையினை வந்தடைந்தவுடன் நிறைவுறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

2. பெரஹராவின் பயண மார்க்கம் :-

   *2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி எதுல் பெரஹரா உற்சவம் ஆரம்பமாகி இரவு 7.25 மணிக்கு விகாரை வளாகத்தில் மாத்திரம் வீதி உலா இடம்பெறும்.*

   *2024 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி இரவு 7.50 மணிக்கு முதியங்கனை ரஜ மகா விகாரையிலிருந்து புறப்பட்டு புகையிரத நிலைய வீதி, அநகாரிக தர்மபால ஒழுங்கை, கீழ் ராஜ வீதி, ராஜ வீதி, நூலக ஒழுங்கை ஊடாக கீழ் ராஜ வீதி முடிவில் மீண்டும் முதியங்கனை ரஜ மகா விகாரைக்கு வருகை தந்ததன் பின்பு பெரஹரா நிறைவுவுறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1A - G 41940 — 05 (2024/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. பதுளை முதியங்கனை ரஜ மகா விகாரை புனித பூமிக்குள், அதனை அண்மித்த மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உணவு சமைத்தல் மற்றும் விற்பனை செய்வதை தடை செய்கின்றேன்.

4. பெரஹரா காலத்தினுள் பிரதான வீதிகளில் தனியார் வாகனங்களை நிறுத்துவதை தடை செய்கின்றேன். சைக்கிள் மற்றும் வண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் என்னுடைய அல்லது முதியங்கனை ரஜ மகா விகாரைக்குப் பொறுப்பான தலைமை மதகுரு அவர்களின் அனுமதிப்பத்திரம் இன்றி விகாரை பூமிக்குள் வருவதைத் தடை செய்கின்றேன்.

5. பெரஹரா ஊர்வலம் செல்லும் வீதிகளில் பதுளை மாநகர சபையினால் முறையான அனுமதியுடன் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ள, நிரந்தரக் கட்டிடங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். காணிப்பகுதிகளை குத்தகைக்கு வாங்கும் வியாபாரிகளினால் விகாரை பெரஹராவின் பின்பு தமது தற்காலிகக் கட்டிடங்களை அகற்றியதன் பின், பெரஹரா பயணிக்கும் வீதி மற்றும் விகாரை பூமிக்குள் காணப்படும் பொலித்தீன் உட்பட அனைத்துக் குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையின்படி அகற்ற வேண்டும்.

6. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் விகாரை புனித பூமி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எந்தவொரு தற்காலிகக் கட்டிடங்களையும் அமைப்பதை தடை செய்கின்றேன்.

7. எவரேனும் ஒருவரினால் என்னிடம் அல்லது பதுளை மாநகர சபையின் அனுமதி இன்றி வீதியாக பயன்படுத்துவதோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணியைப் பயன்படுத்தி குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிப்போ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது.

8. பட்டாசு போன்றவற்றை பிரதேசத்திற்குள் பற்றவைத்தல் கூடாது.

9. பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம்பெற்ற ஒருவரின் அனுமதி இல்லாமல் எவரேனும் ஒருவரினால் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள விகாரைபூமி மற்றும் விகாரை சுற்றுப்புற பிரதேசங்களில் சீட்டுக்கள், கொடிகள் விற்பனை மற்றும் வேறு வகையான எந்தவொரு விடயத்திற்காகவும் பங்களிப்பு நிதி வசூலிக்கக் கூடாது.

**துஷாரி அனுராதா நாணயக்கார,**
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
2024, மே 19.

EOG 05-0116

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.